ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1955/28 - 2016 පෙබරවාරි මස 26 වැනි සිකුරාදා - 2016.02.26

1955/28 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

வடக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் இலக்கம் 6/2015

வடக்கு மாகாண, மாகாண சபையினால் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2015 ஆம்ஆண்டின் 6 ஆம் இலக்க, வடக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச்சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத் தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

பேரவைச் செயலகம்,
ஏ9 வீதி,
கைதடி,
2016.02.24.

**வடக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டம்**

வடக்கு மாகாண சபையின் 2016 ஆம் நிதியாண்டு செலவுகளுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அந்நிதியாண்டில் தேவைப்படும் நிதி மாகாண சபை நிதியத்தினால் அல்லது மாகாண சபையின் அல்லது மாகாண சபைக்கு தகுதி எனக் கொள்ளக்கூடிய வேறு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் முற்பணம் வழங்க வசதிகளை செய்து கொடுப்பதற்கும், மாகாண சபையின் திரட்டு நிதியத்திற்கு அப்பணத்தை மீளச் செலுத்த ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்களை ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச்சட்டம்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**வடக்கு மாகாண சபையினால் கீழ்வருமாறு ஆக்கப்படுகின்றது.**

சுருக்கப்பெயர்.

01. இந் நியதிச்சட்டம் "2015 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு நியதிச்சட்டம்" எனக் குறிப்பிடப்படும்.

2016 நிதியாண்டிற்கான ஒதுக்கீடு.

02. (i) ஏதேனும் நிதித்தொகையொன்றை செலவிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகின்ற யாதாயினுமொரு சட்டத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்நியதிச் சட்டத்தில் 2016 நிதியாண்டு எனக்குறிப்பிடப்படும் 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2016, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடையும் காலத்திற்கு இடைப்பட்ட காலங்களில் வடக்கு மாகாண சபையின் செலவுகளுக்கு என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை இருபத்துமூவாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்பது மில்லியன் எண்ணூற்று எண்பதாயிரம் ரூபாவானது (ரூபா 23,269,880,000),

(அ) மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் உதவிகளினாலும்

அத்துடன்

(ஆ) மாகாண சபை நிதியத்தினால் அல்லது தகுதி எனக்கொள்ளக்கூடிய வேறொரு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் அல்லது தீர்வு செய்கைகளினால் இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு செலவு செய்யப்படுதல் வேண்டும்.

(ii) இந்நியதிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் முதலாவது நிரலில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சார்பான வடக்கு மாகாண சபையின் 2016 ஆம்ஆண்டுக்கான செலவினங்கள் யாவும் வடக்கு மாகாண சபையின் அந்நிதியாண்டின் அவ்விடயத்துக்கான பெறுவனவுகளில் இருந்து மாத்திரமே செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் குறித்த செலவினமானது அந்த விடயத்திற்கெதிரே குறிக்கப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

03. இந்நியதிச் சட்டத்தின் II அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும்விடயம் தொடர்பில் 2016, நிதியாண்டின் முடிவில் நிலுவையாகவுள்ள வரவு மீதி, சொல்லப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதே தலைப்பில் அதி உச்ச எல்லையைத் தாண்டக் கூடாது என்பதுடன் குறித்த நிதியாண்டின் முடிவில் அவ்விடயத்தின் மொத்துப் பரிப்புக்கள் காட்டப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சவும் கூடாது.

நிகழ்ச்சித்திட்டம் மீண்டெழும் செலவினம் தொடர்பாக ஒதுக்கப்பட்டு அதனால் செலவிடப் படாத நிதி அந்நிகழ்ச்சித் திட்டத்தின் வேறு ஒதுக்கீடு ஒன்றிற்கு அல்லது அச்செலவுகளை வேறு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றம் செய்யும் அதிகாரம்.

04. (i) இச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதாவது ஒரு தலைப்பின் கீழ் ஏதாவது நிகழ்ச்சித்திட்டத்தில் மீண்டெழும் செலவினங்களுக்கு அட்டவணையின் ஏற்பாடுகளுக்கேற்ப நிதி ஒதுக்கப்பட்டு இருப்பினும் அது செலவிடப்படாதிருந்து அல்லது எதிர்காலத்தில் செலவு செய்யப்படாது எனக் கருதக்கூடிய ஏதாவது பணத்தொகை அநந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதனச் செலவின் ஒதுக்கீட்டிற்கு அல்லது அத்தலைப்பின் கீழ் வேறு ஏதாவது நிகழ்ச்சித்திட்டத்தின் மீண்டெழும் செலவிற்கோ அல்லது மூலதனச் செலாவிற்கோ ஒதுக்கீடு செய்வதற்கு பிரதம செயலாளரின் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தரின் உத்தரவு பிரகாரம் மாற்றம் செய்யலாம்.

மூலதன செலவினங்களது ஒதுக்கீடுகளை வேறு தலைப்புக்களுக்கு மாற்றுவதற்குள்ள அதிகாரம்.

(ii) மூலதன செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையினை அட்டவணை ஒன்றில் காட்டப்பட்டுள்ள வேறு ஏதேனும் தலைப்பிற்கு மாற்றம் செய்வதற்கு மாகாண சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

ஏற்கனவே அதிகாரம் அளிக்கப்பட்ட செலவுகளை வரையறுப்பதற்கு முதல் அமைச்சர் அவர்களுக்கு உள்ள அதிகாரம்.

05. (i) அதிகாரம் அளிக்கப்பட்ட செலவுகளைச் செய்வதற்கு வரிகளிலிருந்தும், வேறு ஏதேனும் மூலகங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள் எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகையை விட குறையலாம் என,

அல்லது

(ii) ஏதாவது விடயம் அல்லது விடயங்களுக்கு ஆரம்பத்தில் ஒதுக்கிய பணம் மேலும் தேவைப்பட மாட்டாது என முதலமைச்சர் திருப்தியடையும் நிலையில், மாகாண நிதியத்தில் அல்லது மாகாண சபையின் அல்லது மாகாண சபைக்கு தகுதி எனக் கொள்ளக்கூடிய வேறு நிதியத்தில் அல்லது வேறு நிதியங்களில் இருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் செலவு செய்வதற்கு முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணம் முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியினை அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவினத்தை எதிர்கொள்வதற்காக மீளப்பெறுவதற்கு முதலமைச்சரின் அனுமதியுடன் பிரதம செயலாளருக்கு முடியுமாதல் வேண்டும்.

06. முதலமைச்சர் 2017, மாச்சு மாதம் 31 நாள் அல்லது அதற்கு முன்னர் உத்தரவு ஒன்றின் மேல்

*இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதியுயர் எல்லை, ஆகக்குறைந்த எல்லை என்பவற்றை மாற்றுவதற்கு உள்ள அதிகாரம்.*

(i) இச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் அதிஉயர் எல்லைகளுள் எதனையும்;

(ii) இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் மாற்றவோ அல்லது திருத்தவோ முடியும்.

07. வடக்கு மாகாண சபையினால் ஏதேனும் பொருத்தமான பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் தோதான நிரல்களுக்கு ஏதேனும் செயற்பாட்டைச் சேர்ப்பதன் மூலமும்; அத்துடன்

*இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் திருத்தஞ் செய்வதற்கு மாகாண சபைக்கு உள்ள அதிகாரம்.*

(i) அத்தகைய விடயம் தொடர்பான எல்லா அதியுயர் எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவையேனும் ஒன்றையும்;

(ii) அத்தகைய விடயம் தொடர்பான ஆகக் குறைந்த எல்லைகளையும் ஏற்பாடு செய்து திருத்தம் செய்யலாம்.

08. பிரதிப் பிரதம செயலாளர் நிதி அலுவலகத்தின் செலவின நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கருத்திட்டம் நான்கின் (421-08-04) கீழ் குறித்துக் காட்டப்படும் செலவினங்கள் பிரதம செயலாளரினால் முதலாவது அட்டவணையின் எந்தவொரு செலவினத் தலைப்பிற்கும் மாற்ற முடியும். எவ்வாறாயினும் குறித்த பரிமாற்றம் குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றின் மூலம் மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. இந்நியதிச்சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியே மேலோங்கி நிற்கும்.

*வேறுபாடு ஏற்பட்டால் தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.*

## முதலாவது அட்டவணை

| | | மீண்டுவரும் செலவு (ரூபா) | மூலதனச் செலவு (ரூபா) |
|---|---|---|---|
| **ஆளுநர் செயலகம்** | | | |
| **தலைப்பு 400** | | | |
| மீண்டுவரும் செலவு | **56,849,000** | | |
| மூலதனச் செலவு | 2,000,000 | | |
| பிரமாண அடிப்படையிலான நன்கொடை | 2,000,000 | | |
| **தலைப்பு 400 ஆளுநர் செயலகம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | 56,849,000 | 2,000,000 |
| **மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு** | | | |
| **தலைப்பு 401** | | | |
| மீண்டுவரும் செலவு | **28,734,000** | | |
| மூலதனச் செலவு | 1,000,000 | | |
| பிரமாண அடிப்படையிலான நன்கொடை | 1,000,000 | | |
| **தலைப்பு 401 மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | 28,734,000 | 1,000,000 |

| | | மீண்டுவரும் செலவு (ரூபா) | மூலதனச் செலவு (ரூபா) |
|---|---|---|---|
| **மாகாண பேரவைச் செயலகம்** | | | |
| **தலைப்பு 402** | | | |
| மீண்டுவரும் செலவு | **99,000,000** | | |
| மூலதனச் செலவு | 202,000,000 | | |
| பிரமாண அடிப்படையிலான நன்கொடை | 202,000,000 | | |
| **தலைப்பு 402 மாகாண பேரவைச் செயலகம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | 99,000,000 | 202,000,000 |

**முதலமைச்சரின் அமைச்சு - நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்**

| | | மீண்டுவரும் செலவு (ரூபா) | மூலதனச் செலவு (ரூபா) |
|---|---|---|---|
| **தலைப்புக்கள் 410, 411, 412, 413** | | | |
| மீண்டெழும் செலவு | 2,038,691,000 | | |
| மூலதனச் செலவு | 318,500,000 | | |
| பிரமாண அடிப்படையிலான நன்கொடை | 17,500,000 | | |
| மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை | 301,000,000 | | |
| **தலைப்பு 410 முதலமைச்சரின் உள்ளூராட்சி, கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்துறை, மற்றும் காணிகள் அமைச்சு** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | 57,491,000 | 67,000,000 |
| **தலைப்பு 411 உள்ளூராட்சித் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 60 - சனசமூக அபிவிருத்தி | | 1,816,200,000 | 230,500,000 |
| **தலைப்பு 412 தொழில்துறைத் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 51 - கைத்தொழில் அபிவிருத்தி | | 78,000,000 | 16,500,000 |
| **தலைப்பு 413 காணி நிர்வாகத் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 40 - காணிநிர்வாகமும் அபிவிருத்தியும் | | 87,000,000 | 4,500,000 |
| **தலைப்புக்கள் 420, 421, 422, 423, 424, 425, 426** | | | |
| மீண்டெழும் செலவு | 339,224,000 | | |
| மூலதனச் செலவு | 453,350,000 | | |
| பிரமாண அடிப்படையிலான நன்கொடை | 174,000,000 | | |
| செய்யக்கூடிய கருமங்கள் மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை | 118,000,000 | | |
| யுனிசெப் | 11,350,000 | | |
| விசேட செயற்திட்டம் | 150,000,000 | | |
| **தலைப்பு 420 பிரதம செயலாளர் செயலகம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | 66,031,000 | 154,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 09 - மனித வள முகாமைத்துவம் | | 25,639,000 | 2,000,000 |
| **தலைப்பு 421 பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிதி** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 08 - நிதி முகாமைத்துவம் | | 30,480,000 | 286,350,000 |
| **தலைப்பு 422 பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - திட்டமிடல்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 52 - பிராந்திய அபிவிருத்தி | | 47,000,000 | 2,000,000 |
| **தலைப்பு 423 பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - பொறியியல்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 15 - புனர்வாழ்வும் புனருத்தாரணமும் | | 13,500,000 | 2,000,000 |
| **தலைப்பு 424 பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - ஆளணிப் பயிற்சி** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | | 27,000,000 | 3,000,000 |
| **தலைப்பு 425 மாகாண இறைவரித் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 10 - வரியும் தீர்வை நிருவாகமும் | | 17,450,000 | 2,000,000 |

| | | மீண்டுவரும் செலவு (ரூபா) | மூலதனச் செலவு (ரூபா) |
|---|---|---|---|
| **தலைப்பு 426** | **கட்டடங்கள் திணைக்களம்** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 15 - புனர்வாழ்வும் புனருத்தாரணமும்* | | *112,124,000* | *2,000,000* |

**விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல், சுற்றாடல், உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்புக்கள் 430, 431, 432, 433, 434, 435** | | | |
| *மீண்டுவரும் செலவு* | *976,923,000* | | |
| *மூலதனச் செலவு* | *466,500,000* | | |
| *பிரமாண அடிப்படையிலான நன்கொடை* | *26,500,000* | | |
| *மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை* | *410,000,000* | | |
| *கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு* | *30,000,000* | | |
| **தலைப்பு 430** | **விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல், சுற்றாடல், உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம்* | | *49,000,000* | *38,000,000* |
| **தலைப்பு 431** | **விவசாயத் திணைக்களம்** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம்* | | *28,400,000* | |
| *நிகழ்ச்சித்திட்டம் 44 - விவசாய அபிவிருத்தி* | | *217,672,000* | *244,500,000* |
| **தலைப்பு 432** | **கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம்* | | *54,150,000* | |
| *நிகழ்ச்சித்திட்டம் 45 - கால்நடை அபிவிருத்தி* | | *148,424,000* | *117,000,000* |
| *நிகழ்ச்சித்திட்டம் 56 - ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்* | | *4,426,000* | |
| **தலைப்பு 433** | **நீர்ப்பாசனத் திணைக்களம்** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 43 - நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்* | | *310,000,000* | *58,000,000* |
| **தலைப்பு 434** | **கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 53 - கூட்டுறவு அபிவிருத்தி* | | *155,547,000* | *7,000,000* |
| **தலைப்பு 435** | **கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம்* | | *9,304,000* | *2,000,000* |

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்புக்கள் 440, 441, 442** | | | |
| *மீண்டுவரும் செலவு* | | *9,297,631,000* | |
| *மூலதனச் செலவு* | | *1,481,500,000* | |
| *பிரமாண அடிப்படையிலான நன்கொடை* | | *16,500,000* | |
| *மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை* | | *1,000,000,000* | |
| **TSEP** | | *465,000,000* | |
| **தலைப்பு 440** | **கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம்* | | *62,129,000* | |
| *நிகழ்ச்சித்திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம்* | | *12,968,000* | *19,000,000* |
| *நிகழ்ச்சித்திட்டம் 80 - ஆரம்ப நிலைக் கல்வி* | | *118,278,000* | |
| *நிகழ்ச்சித்திட்டம் 93 - சமய கலாச்சார விவகாரங்கள்* | | *46,754,000* | |
| **தலைப்பு 441** | **கல்வித் திணைக்களம்** | | |
| *நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம்* | | *470,285,000* | |
| *நிகழ்ச்சித்திட்டம் 80 - ஆரம்ப நிலைக் கல்வி* | | *3,136,000,000* | |
| *நிகழ்ச்சித்திட்டம் 81 - இரண்டாம் நிலைக் கல்வி* | | *5,369,477,000* | |
| *நிகழ்ச்சித்திட்டம் 87 - கல்வித்துறைக்கு உட்பிரவேசித்தலையும் பங்குபற்றுதலையும் அதிகரிக்கச் செய்தல்* | | *20,105,000* | *1,438,500,000* |
| *நிகழ்ச்சித்திட்டம் 88 - கல்வித் துறைக்கு திட்டமிட்ட சிறந்த சேவையினை வழங்கல்* | | *6,635,000* | |

| | | | மீண்டுவரும் செலவு (ரூபா) | மூலதனச் செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| **தலைப்பு 442** | **விளையாட்டுத் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 90 - மகிழ்வூட்டுதலும் விளையாட்டும் | | | 55,000,000 | 24,000,000 |

**மாகாண சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு**

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைப்புக்கள் 450, 451, 452, 453, 454** | | | | |
| மீண்டுவரும் செலவு | | 5,269,253,000 | | |
| மூலதனச் செலவு | | 1,347,500,000 | | |
| பிரமாண அடிப்படையிலான நன்கொடை | | 20,500,000 | | |
| மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை | | 962,000,000 | | |
| HSDP | | 365,000,000 | | |
| **தலைப்பு 450** | **மாகாண சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | | 52,494,000 | 8,000,000 |
| **தலைப்பு 451** | **சுகாதார சேவைகள் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | | 39,742,000 | |
| நிகழ்ச்சித்திட்டம் 09 - மனித வள முகாமைத்துவம் | | | 5,700,000 | |
| நிகழ்ச்சித்திட்டம் 70 - வைத்திய சேவைகள் | | | 357,645,000 | 1,170,500,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 71 - மக்கள் சுகாதார சேவைகள் | | | 3,517,280,000 | |
| நிகழ்ச்சித்திட்டம் 72 - பொது சுகாதாரசேவைகள் | | | 621,633,000 | |
| **தலைப்பு 452** | **சுதேச மருத்துவத் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | | 37,100,000 | 102,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 73 - சுதேச வைத்தியத்துறை | | | 195,349,000 | |
| **தலைப்பு 453** | **சமூக சேவைகள் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 95 - சமூகப் பாதுகாப்பு | | | 336,000,000 | 33,000,000 |
| **தலைப்பு 454** | **நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 95 - சமூகப் பாதுகாப்பு | | | 106,310,000 | 34,000,000 |

**மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு**

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைப்புக்கள் 460, 461, 462, 463** | | | | |
| மீண்டுவரும் செலவு | | 467,925,000 | | |
| மூலதனச் செலவு | | 423,300,000 | | |
| பிரமாண அடிப்படையிலான நன்கொடை | | 15,000,000 | 43,000,000 | |
| மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை | | 408,300,000 | | |
| **தலைப்பு 460** | **மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண நிருவாகம் | | | 50,586,000 | |
| **தலைப்பு 461** | **கிராம அபிவிருத்தித் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 60 - சனசமூக அபிவிருத்தி | | | 92,217,000 | 33,000,000 |
| **தலைப்பு 462** | **வீதி அபிவிருத்தித் திணைக்களம்** | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 50 - பெருந்தெருக்களின் கட்டுமானமும் பராமரிப்பும் | | | 284,122,000 | 345,300,000 |

| | | மீண்டுவரும் செலவு (ரூபா) | மூலதனச் செலவு (ரூபா) |
|---|---|---|---|
| **தலைப்பு 463** | **மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்** | | |
| நிகழ்ச்சித்திட்டம் 10 - வரியும் தீர்வை நிருவாகமும் | | 41,000,000 | 2,000,000 |
| **மொத்தச் செலவு** | | **18,574,230,000** | **4,695,650,000** |
| **மொத்த மீண்டுவரும் செலவும் மூலதனச் செலவும்** | ரூபா | **23,269,880,000** | |

**மூலதனச் செலவு விபரம்**

| | |
|---|---|
| பிரமாண அடிப்படையிலான கொடை (CBG) | 475,000,000 |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை (PSDG) | 3,199,300,000 |
| பாடசாலைக் கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்திட்டம் (TSEP) | 465,000,000 |
| சுகாதாரத் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் (HSDP) | 365,000,000 |
| யுனிசெப்பின் கருத்திட்டம் (UNICEF) | 11,350,000 |
| மாகாண சபை கட்டடம் கைதடி | 150,000,000 |
| கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு | 30,000,000 |

## இரண்டாவது அட்டவணை

*அரச ஊழியர் முற்பணக் கணக்கு மற்றும் வர்த்தக முற்பணக் கணக்கு*

| தொ. இல. | அமைச்சு/திணைக்களம் | விடய இலக்கம் | செயற்பாட்டின் பெயர் | அதியுயர் செலவின எல்லைகள் | ஆகக் குறைந்த அறவீட்டு எல்லை | அதியுயர் வரவு மீதி எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | I | II | III | IV | V | VI |
| 1 | ஆளுநர் செயலகம் | 40001 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,500,000 | 1,000,000 | 5,441,000 |
| 2 | மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு | 40101 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,200,000 | 700,000 | 3,057,000 |
| 3 | மாகாண பேரவைச் செயலகம் | 40201 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,000,000 | 475,000 | 2,872,000 |
| 4 | முதலமைச்சரின் அமைச்சு - நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் | 41001 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,800,000 | 1,100,000 | 5,657,000 |
| 5 | மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் | 41101 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 7,500,000 | 5,400,000 | 21,146,000 |
| 6 | மாகாண தொழிற்துறைத் திணைக்களம் | 41201 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 3,500,000 | 2,600,000 | 11,703,000 |
| | | 41202 | வர்த்தக முற்பணக் கணக்கு | 1,600,000 | 1,600,000 | 4,230,000 |
| 7 | மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் | 41301 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 3,500,000 | 2,800,000 | 9,515,000 |
| 8 | பிரதம செயலாளர் செயலகம் | 42001 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 5,400,000 | 2,900,000 | 13,640,000 |
| 9 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிதி | 42101 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,600,000 | 850,000 | 4,677,000 |
| 10 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் | 42201 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 3,000,000 | 1,400,000 | 8,567,000 |
| 11 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - பொறியியல் | 42301 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 800,000 | 350,000 | 2,512,000 |
| 12 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - ஆளணி பயிற்சி | 42401 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 800,000 | 450,000 | 2,194,000 |
| 13 | மாகாண இறைவரித் திணைக்களம் | 42501 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,700,000 | 400,000 | 2,276,000 |

| தொ. இல. | அமைச்சு/திணைக்களம் | விடய இலக்கம் | செயற்பாட்டின் பெயர் | அதியுயர் செலவின எல்லைகள் | ஆகக் குறைந்த அறவீட்டு எல்லை | அதியுயர் வரவு மீதி எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | I | II | III | IV | V | VI |
| 14 | மாகாண கட்டடங்கள் திணைக்களம் | 42601 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,000,000 | 2,850,000 | 14,603,000 |
| 15 | மாகாண விவசாயம், சமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல், சுற்றாடல், உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | 43001 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 900,000 | 750,000 | 3,852,000 |
| 16 | மாகாண விவசாயத் திணைக்களம் | 43101 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 7,000,000 | 6,500,000 | 17,347,000 |
| | | 43102 | வர்த்தக முற்பணக் கணக்கு | 12,000,000 | 8,000,000 | 4,000,000 |
| 17 | மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் | 43201 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 7,000,000 | 3,800,000 | 19,256,000 |
| | | 43202 | வர்த்தக முற்பணக் கணக்கு | 19,000,000 | 15,500,000 | 3,500,000 |
| 18 | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் | 43301 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 9,000,000 | 5,700,000 | 21,020,000 |
| 19 | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 43401 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 5,700,000 | 4,300,000 | 17,993,000 |
| 20 | மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 43501 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 400,000 | 250,000 | 1,441,000 |
| 21 | மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 44001 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,000,000 | 2,200,000 | 11,691,000 |
| 22 | மாகாண கல்வித் திணைக்களம் | 44101 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 300,000,000 | 210,000,000 | 423,232,000 |
| 23 | மாகாண விளையாட்டுத் திணைக்களம் | 44201 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 2,500,000 | 1,450,000 | 6,957,000 |
| 24 | மாகாண சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 45001 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,500,000 | 950,000 | 4,397,000 |
| 25 | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | 45101 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 110,000,000 | 70,000,000 | 301,765,000 |
| 26 | மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் | 45201 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,000,000 | 2,500,000 | 7,515,000 |
| 27 | மாகாண சமூக சேவைகள் திணைக்களம் | 45301 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,000,000 | 2,500,000 | 12,804,000 |
| 28 | மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 45401 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 3,000,000 | 1,800,000 | 9,264,000 |
| 29 | மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு | 46001 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 2,000,000 | 575,000 | 4,413,000 |
| 30 | மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் | 46101 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 5,000,000 | 3,300,000 | 11,748,000 |
| 31 | மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் | 46201 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 3,500,000 | 2,300,000 | 10,800,000 |
| | | 46202 | வர்த்தக முற்பணக் கணக்கு | 15,000,000 | 13,000,000 | 2,000,000 |
| 32 | மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 46301 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,600,000 | 900,000 | 5,495,000 |
| | **மொத்தம்** | | | **556,000,000** | **381,150,000** | **1,012,580,000** |

3 - 344

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.